(2) அவையுரிமைக் கேள்வி.

நடவடிக்கைச் சுருக்க வெளியீட்டில் இருப்பதாகச் சொல்லப் படும் பிழைகள் குறித்து.

THIRU J. JAMES : Sir, I wish to raise a matter of privilege Rule 234 of our Assembly Rules says that an official report of the proceedings of the Assembly shall be published . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பிரிவிலெஜ் மாட்டரை' இந்த அவையில் கிளப்புவதற்கு முன்னாலேயே பேரவைத் தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

THIRU J. JAMES : It has been brought to my notice just now and I am bringing it to the notice of the Hon. Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவருக்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் நீங்கள் பிரச்சினையைக் கிளப்ப முடியாது. நீங்கள் முன் அறிவிப்பு கொடுத்து அது பிரிவிலெஜ் என்பதன்கீழ் வருகிறதா இல்லையா என்று நான் முடிவு கூறிய பிறகுதான் நீங்கள் கொண்டு வர முடியும்.

THIRU J. JAMES : I shall raise it and the Hon. Speaker may allow it and admit it for discussion the next day. Under our rules, privilege matter can be raised at any moment.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நிகழ்ச்சி எதையொட்டியது என்ற விதியை மட்டும் படியுங்கள்.

THIRU J. JAMES : I can bring it to the notice of the Hon. Speaker. The Hon. Speaker may allow it or may not allow it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்த விதியின்கீழ் நோட்டீஸ் கொடுக்காமலே கேட்கலாம் என்று கூறுகிறீர்களோ,) அப்படி இருக்கிற அந்த விதியை மட்டும் படியுங்கள்.

THIRU J. JAMES : Proviso to Rule 184.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் புத்தகம் எந்தத் தேதி வரை திருத்தப்பட்டது என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

THIRU J. JAMES : Rules corrected up to 31—1—1968.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் மார்ச் 1969 வரை திருத்தப்பட்ட புத்தகம் இருக்கிறது.

THIRU J. JAMES : This rule has not been amended so far. This rule is in force now. It says :—

" Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice ".

I request.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House" இருக்கிறது. இந்த அவை நடைபெறுகிற நேரத்திலே உரிமை மீறப்பட்டிருந்தால் பேரவைத் தலைவருக்கு அறிவிப்பு கொடுக்காமலே எழுப்பலாம்.

THIRU J. JAMES : Proceedings of this House are recorded and published under rule 234 of our Rules. But the proceedings are incorrectly reported on 28–2–1970 and it has been brought to my notice only just now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கூறுவதை பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வராமல் இந்த அவையிலே எழுப்ப முடியாது. இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மீறப்படுகின்ற உரிமைகளைத்தான், இன்று காலை 9 மணிக்குத் தொடங்கி 1½ மணிக்கு முடிகின்ற வரை நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே ஏதாவது உரிமை மீறப்படுகின்ற நிலை இருந்தால் அதைச் சுட்டிக் காட்டும்போதுதான் பேரவைத் தலைவருக்கு முன் அறிவிக்கை கொடுக்காமல் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அதுதான் விதி. நேற்று நடந்த நிகழ்ச்சியை அறிவிக்கும் முறையில் தவறு நடந்திருந்தால் அதைப் பற்றி முன் கூட்டியே பேரவைத் தலைவருக்கு அறிவித்து விட்டுத்தான் இங்கே சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் சொல்வதை கொஞ்சம் கேட்க வேண்டும்.

The proviso says as follows :—

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice".

The matter has arisen during this sitting. The fact that it was recorded might be before this.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு நான் மீண்டும் சொல்லுகிறேன். இன்று 4-ம் தேதி. இன்று காலை 9 மணிக்குத் தொடங்கி 1½ மணி வரை நடைபெறுகின்ற அவை நிகழ்ச்சியில் உரிமை மீறப்படுகின்ற நிலை ஏற்பட்டால் அதைச் சுட்டிக் காட்டுவதற்கு மட்டுந்தான் பேரவைத் தலைவருக்கு முன் அறிவிக்கையின்றி, 'ஸ்பான்டேனியஸ்' ஆக உறுப்பினர்கள் எழுந்து உரிமைப் பிரச்சினையை எழுப்பலாம். அதுதான் இந்த விதி. தாங்கள் கூறுவது அந்த விதமான நிகழ்ச்சி அல்ல. ஆகவே தங்களுக்கு நான் அனுமதி தர முடியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதில் உள்ளது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. சபையில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை அறிவிப்பதில் கூட இனிஷியல்ஸ் மாறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெயர்கள் மாற்றிக் கொடுககப்பட்டிருக்கிறது. அதனால் பெரிய தவறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மகாதேவன் பிள்ளை என்ற பெயர் ஜேம்ஸ் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு வந்து கலந்துக்கொண்டிருக்கும்போது பெயர்களை மாற்றுவது, இனிஷியல்ஸை மாற்றுவது போன்ற தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தயவு செய்து இதைக் கவனித்து இனிமேல் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த ப்ரொவைஸோ எப்படித் திருத்தப்பட்டது என்பது தங்களுக்கு நினைவிருக்குமென்று நான் நம்புகிறேன். இதுபோன்று உரிமைப் பிரச்னை கொண்டுவரும் போது முன்கூட்டி எழுத்துமூலம் கொடுக்காமல் எடுக்கப்படக் கூடாது என்று முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் எழுப்பி, அந்தத் தரப்பிலிருந்த நாங்கள் அப்படிக் கொண்டுவரக்கூடாது என்று எழுப்பி பின்னால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தத்திற்கு நீங்கள் கொடுத்த விளக்கம் நிற்கவேண்டுமென்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது கூட நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரும்போது கூட உங்கள் அனுமதி இல்லாமல் கொண்டுவர முடியாது.

The Speaker has got to waive notice. Suppose he says 'I am not prepared to waive notice', then no member can raise the matter.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதை, நண்பர் அவர்கள் முன்பே சுட்டிக்காட்டியிருந்தால், இவ்வளவு நீண்ட விவாதம் ஏற்பட்டிருக்காது. மகாதேவன் பிள்ளையை ஜேம்ஸ் என்றும், 'எல்' என்ற இன்ஷியல்ஸ் 'என்' என்றும் அச்சடிக்கப்பட்டு விட்டது என்ற தவறுக்காகவும் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இவ்வளவு நீண்ட நேரம் செலவழித்திருக்கவேண்டியதில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் தவறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், அலுவலகத்தில் உள்ளவர்கள் அதைத் திருத்திக்கொள்ள ஏதுவாக இருந்திருக்கும்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.